தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2039, பங்குனி 29

2008 ஏப்ரல் 11, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தெரிதலுந் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு."

ஒரு செயலைத் தேர்ந்தெடுத்தலும், அதனை நிறைவேற்றிட வழிவகைகளை ஆராய்ந்து ஈடுபடுதலும், முடிவு எதுவாயினும் அதனை உறுதிபடச் சொல்லும் ஆற்றல் படைத்திருத்தலும் அமைச்சருக்குரிய சிறப்பாகும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா எண் 91, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

92—

அரிசி ஆலை

***34465—திரு. இரா. மாணிக்கம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை தொகுதியில் நவீன அரிசி ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஏப்ரல் 11

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) குளித்தலை தொகுதியில் நவீன அரிசி ஆலை அமைக்க அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) வினா எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.*

திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, முழுக்க முழுக்க விவசாயத்தையே நம்பியிருக்கின்ற தொகுதி. அங்கே சுமார் 7,000 எக்டேர் விவசாய நிலங்கள் உள்ளன. 30,000-த்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் விவசாயத்தையே நம்பி இருக்கின்றன. அங்கே ஒரு நவீன அரிசி ஆலை அமைந்தால், விவசாயிகளுக்கு மிகுந்த உதவியாக இருக்கும். மேலும், நெல் அதிகப்படியாக உற்பத்தியாவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. தலைவர் ஆட்சிக் காலத்திலே அந்த ஆலை அமையாவிட்டால், வேறு எந்தக் காலத்திலே அமையப் போகிறது என்று தொகுதி மக்கள் ஏக்கத்தோடு கேட்கிறார்கள். ஆகவே, குளித்தலையிலே நவீன அரிசி ஆலை அமைக்க ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தில் மொத்தம் சுமார் 50 கூலி அரிசி அரைவை ஆலைகள் உள்ளன. 6 நவீன அரிசி ஆலைகளும் உள்ளன. குளித்தலை தொகுதியைப் பொறுத்த அளவில், நவீன அரிசி ஆலை ஒன்றும் இல்லை. 12 கூலி அரைவை நிறுவனங்கள் தனியாரால் நடத்தப்பட்டு வருகின்றன. எனினும், குளித்தலை தொகுதியில் தொழில் முனைவோர்கள் நவீன அரிசி ஆலை அமைக்க முன்வருவார்களேயானால், அவர்களுக்கு அந்தத் தொழில் ஆரம்பிக்கத் தேவையான வழிமுறைகள், திட்ட அறிக்கை தயாரித்தல், வங்கிக் கடன் உதவி, துறை சார்ந்த ஒப்புதல்கள், மின் இணைப்புப் பெற்றளித்தல், மானிய உதவி மற்றும் சந்தை உதவி ஆகியவற்றுக்குத் தேவையான உதவிகளை கரூர் மாவட்டத் தொழில் மையம் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2008 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் முன்வந்தால் அரிசி ஆலை நிறுவனம் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் தங்கள் பதிலிலே சொல்லியிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட, அந்த அளவிற்கு செல்வாக்குப் படைத்த, பணம் படைத்த தனியார் குளித்தலை தொகுதியில் மிகவும் குறைவு. இருந்தாலும், விண்ணப்பதாரர்களை அணுகி அதற்கான முயற்சியை எடுக்கிறேன் என்று சொல்லி, வருங்காலத்திலாவது அரசு நவீன அரிசி ஆலை அமைப்பதற்கு ஆவன செய்யவேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு சமீபத்தில் அறிவித்துள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்கொள்கை 2008-ன்படி, நவீன அரிசி ஆலை வேளாண்சார் தொழில் வகைப்பாட்டில் வருவதால், மாநிலத்தில் எந்தப் பகுதியில் ஆரம்பிக்கப்படும் அந்த ஆலைகளுக்கும் அரசு அறிவித்துள்ள 15 சதவிகித முதலீட்டு மானியம், மூன்று ஆண்டுகளுக்கு 20 சதவிகித மின் மானியம், சிறப்பு வகைத் தொழில் முனைவோர் மானியம், வேலைவாய்ப்பு உருவாக்கும் மானியம் மற்றும் சுற்றுச்சூழலுடன் இயைந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் தொழில்நுட்ப மானியம் என பல்வேறு மானியப் பலன்கள் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்தச் சலுகைகள் மட்டுமின்றி, வேளாண்சார் தொழில் நிறுவனங்கள் மத்திய அரசின் மானியத்தைப் பெற்றாலும், மாநில அரசின் மானியத்தையும் கூடவே பெறும் அளவிற்கு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, தனியார் இலகுவாக அந்த நவீன அரிசி ஆலையை அமைக்க வாய்ப்புகள் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். மணி.

திரு. எஸ். மணி: பேரவைத் த்லைவர் அவர்களே, என்னுடைய பொங்கலூர் தொகுதி முழுக்க முழுக்க ஏழையெளிய மக்கள், விவசாயக் கூலித் தொழிலாளர்களைக் கொண்ட தொகுதி. அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைப்பதற்காக இடமெல்லாம் சர்வே

செய்யப்பட்டது. எப்போது அந்தத் தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-35

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தமில்லையென்றாலும், நான் நேற்று சட்டமன்றத்தில் அறிவித்தபடி பொங்கலூர் தொகுதி, கண்டியன்கோயில் கிராமத்தில் விரைவில் இந்த ஆண்டே தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம்.

திரு. ஆர். சிவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்மூலம் அமைக்கப்பட்டிருக்கின்ற அரிசி ஆலைகள் வேளாண் தொழிலைச் சார்ந்தவை. அவற்றுக்கு மின் கட்டணம் முழுவதும் தள்ளுபடி செய்யவில்லையென்றாலும், tariff வகுத்து, குறைந்த கட்டணம் பெற அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிமேல் புதிதாகத் தொடங்குகின்ற நவீன அரிசி ஆலைகளுக்கு, அவை சிறு, குறு, நடுத்தர தொழில் வகைப்பாட்டில் அமைந்தால், அவற்றுக்கு ஆண்டுக்கு 20 சதவிகிதம் என மூன்று ஆண்டுகளுக்கு, மின் மானியம் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார்.

திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்குன்றத்தில் சுமார் 100 நவீன அரிசி ஆலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. திருவள்ளூர் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் ஆந்திரா போன்ற பகுதிகளிலிருந்து நெல், அரைவைக்கு வருகின்றது. அரிசியைத் தரம் பிரிப்பதற்கு நவீனக்

2008 ஏப்ரல் 11]

கருவிகள் இப்பொழுது வந்திருக்கின்றன. அப்படிப் பெரிய தொழிற்சாலைகள், நவீன அரிசி ஆலைகள், அதுபோன்ற நவீன கருவிகளைப் பொருத்தி, அரிசியைத் தரம் பிரிப்பதற்குத் தேவையான கருவிகளை, தமிழக அரசு அப்பகுதியில் நிறுவி, ஏழையெளிய, சிறு, குறு வியாபாரிகளுக்கு அரிசி ஆலை அமைக்க முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அறிவித்தபடி அரிசி ஆலைகள் அல்லது வேளாண்சார் தொழில்கள் எங்கு அமைந்தாலும், தமிழக அரசு அறிவித்துள்ள, தலைவர் கலைஞர் அறிவித்துள்ள மானியமும், அதேபோல, கூடுதலாக மத்திய அரசு அறிவித்திருக்கின்ற ஏராளமான மானியமும் பெற வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. தனியார்களுக்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. புதிய கருவிகள் ஏராளமாக வந்திருக்கின்றன. அவற்றை அவர்கள் வாங்கிப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூரிலே ஒரு ஜவ்வரிசித் தொழிற்சாலையோ அல்லது ஒரு தொழிற்பேட்டையோ அமைக்கக்கூடிய வாய்ப்பு உள்ளதா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

ஏனென்றால், அங்கு திறமையான, படித்த இளைஞர்கள் உள்ளனர். அதேபோல, ஏழை மக்களும் உள்ளனர். அங்கே ஒரு ஜவ்வரிசித் தொழிற்சாலை அமைத்தால் அங்குள்ள விவசாயிகளுக்குச் சாதகமாக அமையும். எங்கள் மாவட்ட அமைச்சர் அவர்கள் விவசாயிகளைக் காப்பாற்றுகின்றவகையிலே, தொழிற்சாலைக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்துள்ளார். அதன்காரணமாக, நமது அரசு மூலமாக ஒரு தொழிற்சாலை அமைய வேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வேளாண்சார் தொழிலிலே வருகின்ற

காரணத்தினால், தாங்கள் கூறிய அந்த ஆத்தூர் பகுதியில் தொழிற்சாலைகளைத் தனியார்கள் அமைத்தால், மத்திய மானியமும், மாநில அரசு வழங்கும் மானியமும், இரண்டும் கிடைக்கும்.

அதேபோல, பல்வேறு சலுகைகள் தொழில் கொள்கையிலே அறிவிக்கப்பட்டிருப்பதால், தனியார்கள் அவற்றைச் சாதகமாகப் பயன்படுத்தி, தொழிற்சாலைகள் அமைக்கலாம். ஏற்கெனவே சேலத்தில் 400-க்கும் மேற்பட்ட சேகோ தொழிற்சாலைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அவற்றிலே, 30-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் நலிவுற்ற நிலையில் இருக்கின்றன. அவற்றைக்கூட மீண்டும் இயக்குவதற்கு இந்த அரசு முயற்சிகள் செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

93—

புதிய கட்டடம்

***31863—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் சார்-பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.